லீமா வீரச்சாவாம் என்ற செய்தி போராளிகளாலும், மக்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு உண்மையாகின்றது. செய்தியைக் கேள்விப்பட்டு மக்கள் கண்ணீர் வடித்தார்கள். ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் இந்தச் செய்தி பின்னர் வெளியாகி உலகெங்கும் இருந்தும் அவரது இழப்பின் வேதனையைப் பகிர்ந்து கொண்டிருந்தனர் தமிழ் மக்கள்.

லீமாவின் இழப்பினால் விடுதலைப் புலிகள் மட்டுமல்ல ஆறாத்துயரில் அன்று வன்னி மக்களும் ஆழ்ந்தார்கள். எங்கும் சோக கீதங்கள் இசைக்க விடப்பட்டன. புலிகளின் குரல் வானொலி சோகத்தை கொட்டியது. வீதிகள் எங்கும் சிகப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு லீமா அவர்களின் படங்கள் வைக்கப்பட்டு வணக்க நிழ்வுகள் நடைபெற ஏற்பாடாகி இருந்தன. விடுதலைப் புலிகளின் கட்டமைப்பிற்கு அமைவாக லீமா அவர்களின் வித்துடல் தியாகசீலம் கொண்டு செல்லப்பட்டு, அங்கு உடல் தூய்மையாக்கப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பார்வைக்காக வித்துடல் செல்கின்றது.

அங்கு விடுதலைப் புலிகளின் அனைத்து தளபதிகளுகம் கூடியிருந்தார்கள். அங்கு தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் மலர்மாலை சூட்டி வீரவணக்கம் செய்ததைத் தொடர்ந்து தளபதிகள், பொறுப்பாளர்கள் வீரவணக்கம் செலுத்தினார்கள். இதன்பின்பு வித்துடல் படையணிசார் வீரவணக்கதிற்காகவும் மக்கள் வீரவணக்கத்திற்காகவும் வைக்கப்படுகின்றது.

இதற்காக ஒளுங்கமைக்கப்பட்ட இடங்கள் முழுப்படைய மதிப்புடன் விதைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அனைத்து உயர்மட்டத் தளபதிகள், பொறுப்பாளர்கள் போராளிகள், மக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றிருந்தார்கள். முதற் தடவையாக இத்தனை ஆயிரம்பேரால் நிறைந்திருந்தது முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம். எல்லாப் போரளிகளையும் விம்மி அழவைத்துவிட்டு லீமா சென்றுவிட்டார். அவர் மறைந்துவிடவில்லை, ஒவ்வொரு தமிழ் மக்கள் மனங்களிலும், ஒவ்வொரு போராளிகளின் மனங்களிலும் என்றும் நிறைந்திருக்கின்றார். அவரின் நினைவைச் சுமந்தபடி, அவர் கொடுத்த விடுதலை உணர்வைச் சுமந்தபடி அவர் வளர்த்துவிட்ட போராளிகள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், அவரது இழப்பு போராட்டத்திற்கு ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதை நாங்கள் பின்னர் கண்டுகொண்டோம். அதனை தொடர்ந்து வரும் தொடரில் பார்ப்போம்.

*-*-*-*-*-*-*

பால்ராஜ் அண்ணையின் இழப்பில் சோர்ந்து போயிருந்த உள்ளங்களுக்கு, உற்சாகத்தை ஊட்டிய, பெரும் வெற்றியைப் பெற்றுத்தந்த தாக்குதலாக சிறுத்தீவுத் தாக்குதல் அமைந்திருந்தது. ஈருடகப் படையணியின் இந்த நீண்ட தூரம் கடலில் சென்று தாக்குதல் நடத்திவிட்டு திரும்பி வருகின்ற வெற்றிச் செய்திகள் தமிழ் மக்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்த போதும், இது இந்தியாவிற்கு பெரும் அச்சத்தை கதையாக ஈருடகப் படையணியின் தாக்குதலால் இந்தியா தேவையில்லாமல் தனது அச்சத்தை அதிகரித்துக்கொண்டது. அல்லது அவ்வாறு காட்டிக் கொள்ள அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது.




**முள்ளிவாய்க்காலில் இறுதி வரை நின்று போராடிய போராளியின் அனுபவப் பதிவு இது. பாதுகாப்பான தளம் ஒன்றை இவர் சென்றடையும் வரை இவரது விபரங்களை தவிர்த்துக்கொள்கின்றோம்.**

புலிகளின் பலம் வாய்ந்த முக்கிய இரு படையணிகளை கட்டுப்படுத்தும் பொறுப்பை இந்தியா நேரடியாகப் பொருப்பேற்றிருந்ததை இதன்மூலம் புரிந்து கொள்ளலாம். இவை வெளியில் தெரிந்தவை. இவற்றைவிட வெளியில் தெரியவராத உதவிகள் இன்னும்

# ஈருடகப் படையணியின் தாக்குதலால் வேண்டாத அச்சத்தை வளர்த்துக்கொண்ட இந்தியா

தெரிவுசெய்யப்பட்டு இரகசியமான ஏற்பாடுகள் நடந்தேறுகின்றன. முள்ளியவளை நீராவிப்பிட்டியில் உள்ள வீட்டில் இருந்து எடுத்துசெல்லப்பட்டு ஒட்டிசுட்டான் வழியாக மாங்குளம் சென்று பின்பு மல்லாவி சென்று அதன் ஊடாக அக்கராயன் சென்று, ஸ்கந்தபுரம் சென்று கோணாவில், கிளிநொச்சி, பரந்தன், விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு வழியாக மீண்டும் வித்துடல் முள்ளியவளையினை சென்றடைந்தது. லீமா அவர்களின் வித்துடலினை பார்ப்பதற்காக மக்கள் வீதிகளில் மலர்மாலைகளுடன் குவிந்து நின்றார்கள்.

ஏற்படுத்தியிருந்தது. கடற்புலிகளின் தாக்குதல்களை அவதானித்து வந்த இந்தியா, இவ்வாறான தாக்குதலின் பின்னர் மேலும் ஆழமாக அவதானிக்கத் தொடங்கியது.

30 கிலோ மீற்றர் தூரம் கடலில் சென்று தாக்குதல் நடத்திவிட்டு திரும்பும் கடற்புலிகளால், 36 கிலோ மீற்றர் கடல் எல்லையைக் கொண்ட இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் இடையிலான கடற்பரப்பில் எவ்வாறான தாக்குதலையும் நடத்த முடியும் என்று அவர்கள் வேண்டாத கற்பனைகளை வளர்த்திருக்க வேண்டும். இதன் காரணமாகத்தான் இந்திய – இலங்கை கடல் எல்லையில் குண்டுகளை சிறீலங்கா

ஆனால், உண்மை அதுவல்ல. சமாதான காலத்திற்குப் பின்னர் சிறீலங்கா தனது படை வலுவை அதிகரிக்கத் தொடங்கிய நிலையில், அதனைப் பலப்படுத்தும் உதவிகளை இந்தியா வழங்கியிருந்தது. குறிப்பாக கடற்புலிகளை கட்டுப்படுத்தும் அவர்களின் செயற்பாடுகளை கண்டறிந்து உளவு சொல்லும் செயற்பாடுகளை இந்தியா போர் ஆரம்பிப்பதற்கு முன்னரே ஆரம்பித்துவிட்டது.

இந்தியாவின் இந்த சிறீலங்காவிற்கான இராணுவ உதவிகளையும், அவர்களின் விடுதலைப் புலிகள் அழிப்பிற்கு உதவிவரும் செயற்பாடுகளையும் போர்

அதிகம். போராட்டத்தின் பின்னடைவிற்கு இவைகளும் தான் காரணங்கள். எனினும், இறுதிவரை போராடும் முடிவில் விடுதலைப் புலிகள் இருந்தார்கள். கடைசிப் போராளி இருக்கும் வரை போராட்டம் தொடரும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள்.

இதனால்தான், போர் முள்ளிவாய்காலில் முடியும் வரை அவர்கள் போராடினார்கள்.

யாழ்குடாவின் தீவுகள் மீது வெற்றிகரமாகத் தாக்குதலை நடத்திய ஈருடகப் படையணியின் அடுத்த தாக்குதல் மன்னார் கடற்படைத் தளங்கள் மீது செல்கின்றது. வன்னியின் மேற்கே மன்னார்,

**விடுதலைப் புலிகளின் பலம் வாய்ந்த முக்கிய இரு படையணிகளை கட்டுப்படுத்தும் பொறுப்பை இந்தியா நேரடியாகப் பொருப்பேற்றிருந்ததை இதன்மூலம் புரிந்துகொள்ளலாம். இவை வெளியில் தெரிந்தவை. இவற்றைவிட வெளியில் தெரியவராத உதவிகள் இன்னும் அதிகம். போராட்டத்தின் பின்னடைவிற்கு இவைகளும்தான் காரணங்கள். எனினும், இறுதிவரை போராடும் முடிவில் விடுதலைப் புலிகள் இருந்தார்கள்.**



இரவிரவாகவே வித்துடல் நகர்ந்து சென்றது. இரவிரவாக வீதிகளில் காத்திருந்து மக்கள் வித்துடலிற்கு வணக்கம் செலுத்தினார்கள். சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு வீரவணக்க நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் ஆகியோர் வீரவணக்கம் செலுத்தி உரை நிகழ்த்துகின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள் கட்டளைத் தளபதிகள், பொறுப்பாளர்கள் அனைவரும் வீரவணக்கத்தில் லீமா அவர்களின் போராட்ட வரலாற்றினை எடுத்து கூறினார்கள். லீமா அவர்களின் இறுதிவணக்கம் வன்னியில் நடந்தேறி வித்துடல் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில்

கடற்படையினர் விதைத்து வைத்துள்ளதாக வெளியிடப்பட்ட செய்திகளையும் கொள்ள முடியும்.

ஆனால், சிறுத்தீவு கடற்படைத் தளத்தின் தாக்குதல் மூலம் யாழ்குடாவின் மீது அதிகம் கண்காணிப்பு நடவடிக்கையை சிறீலங்கா கடற்படையினர் குவிப்பார்கள் என்ற நோக்கத்துடன்தான் இந்தத் தாக்குதல் முக்கியமாக விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டது. அதாவது, தமது ஈருடகப் படையணிக்கான பயிற்சியை வழங்குவதுடன் இராணுவத்தைத் திசை திருப்பும் அல்லது அவர்களின் வளங்களை இன்னொரு பக்கத்திற்கு இழுத்துச் செல்லும் ஒரு நடவடிக்கையாகவும்தான் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், பனையில் தேள் கொட்ட, தென்னையில் நெறிகட்டிய ஆரம்பித்ததன் (சமாதானத்தனத்திற்கு) பின்னர் அம்பலப்படுத்திய பெரும் பங்கு ஈருடகப் படையணிக்கே முதலில் உண்டு. யாழ்குடா மீதான இவர்களின் தாக்குதல்களே இந்தியாவின் இராணுவ உதவிகளை அம்பலப்படுத்தி வைத்தது. எனவே, ஈருடகப் படையணியின் தாக்குதல்களை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் மேலும் பல உதவிகளை இந்தியா வழங்கியிருந்தது.

அத்துடன், வான் தாக்குதல்களை கண்காணிக்க வவுனியாவிலும், தமிழகத்தின் கரையோரங்களிலும் கண்காணிப்பு நிலைகளை உருவாக்கியிருந்ததன் மூலம் விடுதலைப் புலிகளின் கடல், வான் தாக்குதல்களை தடுக்கும் முழுமையான பொறுப்பை இந்தியா எடுத்திருந்தது என்றே கொள்ளலாம். விடுதலைப்

திருக்கேதீஸ்வரம் தொடக்கம் விடத்தல்தீவு, நாச்சிக்குடா, பூநகரி என மிக நீண்ட (அண்ணளவாக) 80 முதல் 100 கிலோ மீற்றர் வரையான கடற்பரப்பு விடுதலைப் புலிகளின் ஆளுகையில் காணபட்டது.

விடத்தல்தீவில் விடுதலைப் புலிகளின் கடற்படைத்தளம் ஒன்றும் காணப்பட்டது. அப்போது, மன்னர் மாவட்ட கடற்புலிகளின் தளபதியாக அச்சுதன் இருந்தார். இவரது அணியின் வேவு நடவடிக்கையின் கீழ் மன்னார் சிறுப்பிட்டி சிறீலங்கா கடற்படை தளம் மீதான அடுத்த கட்டத் தாக்குலுக்கான வேவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடரும் .....